## கொடநாடு வழக்கு: இன்று ஓபிஎஸ் ஆதரவாளர்கள் – அமமுகவினர் போராட்டம்

**சென்னை, ஜூலை 31:** ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில் நடந்த கொலை கொள்ளை வழக்கில் உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்களுடன் இணைந்து அமமுகவினரும் தமிழகம் முழுவதும் செவ்வாய்க்கிழமை (ஆக.1) போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

திமுக ஆட்சிக்கு வந்து இரு ஆண்டுகளுக்கு மேலாகியும் கொடநாடு கொலைவழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டியும், உண்மையான குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தியும் இந்தப் போராட்டத்தை ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

அவர்களுக்கு ஆதரவாக அமமுகவினரும் இணைந்து போராட்டத்தில் பங்கேற்பார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலர் டிடிவி.தினகரன் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

தேனியில் நடைபெறவுள்ள போராட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம், டிடிவி. தினகரன் ஆகியோர் இணைந்து பங்கேற்கவுள்ளனர். பிற இடங்களில் ஓபிஎஸ் ஆதரவாளர்களுடன், அமமுகவினரும் இணைந்து போராட்டம் நடத்தவுள்ளனர்.

### பணி நியமன ஆணை...



தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் 143 பேருக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை பணி நியமனம் வழங்குவதன் அடையாளமாக 5 பேருக்கு நியமன ஆணை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, உள்துறை செயலர் பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் பூஜாரி.

## என்.எல்.சி. நிறுவனத்துக்கு எதிர்ப்பு: அதிமுக எம்எல்ஏ-க்கள் இருவர் உண்ணாவிரதம்



புவனகிரியில் சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலக வளாகத்தில் திங்கள்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட அதிமுக எம்எல்ஏ-க்கள் ஆ.அருண்மொழிதேவன், கே.ஏ.பாண்டியன் உள்ளிட்டோர்.

**சிதம்பரம், ஜூலை 31:** என்எல்சி இந்தியா நிர்வாகத்தைக் கண்டித்து கடலூர் மாவட்டம், புவனகிரியில் அதிமுக எம்எல்ஏ-க்கள் இருவர் திங்கள்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேல்வளையமாதேவி கிராமத்தில் என்எல்சி இந்தியா நிறுவனம் 2-ஆவது சுரங்க விரிவாக்கப் பணிக்காக விவசாய நிலங்களை கையகப்படுத்தி பரவனாறு கால்வாய் விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக நெல் பயிர்கள் அழிக்கப்பட்டதால் சர்ச்சை எழுந்தது.

இந்த விவகாரத்தில் என்எல்சி நிறுவனமும், தமிழக அரசும் விவசாயிகளை வஞ்சித்து வருவதாகக் கூறி மேல்வளையமாதேவி கிராமத்தில் புவனகிரி சட்டப் பேரவை உறுப்பினரும், கடலூர் மேற்கு மாவட்ட அதிமுக செயலருமான ஆ.அருண்மொழிதேவன் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், போராட்டத்துக்கு காவல் துறையினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

இதையடுத்து, எம்எல்ஏ ஆ.அருண்மொழிதேவன் தனது அலுவலகத்திலேயே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்தார். அதன்படி அவர் புவனகிரியில் சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் தனது கட்சியினர், விவசாயிகளுடன் திங்கள்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். இதில் சிதம்பரம் சட்டப் பேரவை உறுப்பினர் கே.ஏ.பாண்டியனும் பங்கேற்று உண்ணாவிரதம் இருந்தார்.

போராட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்வி ராமஜெயம், முன்னாள் எம்எல்ஏ சிவசுப்பிரமணியன், அதிமுக மாவட்ட அவைத் தலைவர் எம்.எஸ்.என்.குமார், சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை சங்கத் தலைவர் காஜூர் பாலசுந்தரம், மாவட்ட அதிமுக பொருளாளர் தோப்பு சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பேரவைச் செயலர் உமா மகேஸ்வரன் வரவேற்றார்.

போராட்டத்தையொட்டி சிதம்பரம் ஏஎஸ்பி பி.ரகுபதி தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

# கிருஷ்ணகிரி வெடிவிபத்து: சிறப்பு நீதிபதி விசாரணை

**கிருஷ்ணகிரி, ஜூலை 31:** கிருஷ்ணகிரி பட்டாசுக் கிடங்கு வெடிவிபத்து குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட சிறப்பு நிர்வாக நீதிபதி, தனது விசாரணையை திங்கள்கிழமை தொடங்கினார்.

கிருஷ்ணகிரியில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த வெடிவிபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வெடிவிபத்து குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ள சிறப்பு நிர்வாக நீதிபதியை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் கே.எம்.சரயு நியமித்துள்ளார்.

சிறப்பு நிர்வாக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள குருபரப்பள்ளி சிப்காட் நிலம் எடுப்பு தனி மாவட்ட வருவாய் அலுவலர் பவணந்தி, வெடிவிபத்து நிகழ்ந்த பழைய பேட்டையில் விசாரணையை திங்கள்கிழமை தொடங்கினார்.

வெடிவிபத்தில் உயிரிழந்த உறவினர்களிடம் அவர் விசாரணை மேற்கொண்டார்.

விபத்தில் உயிரிழந்த உணவக உரிமையாளர் ராஜேஸ்வரியின் மகள், மருமகள் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர்கள் கூறுகையில், உணவகத்தில் எரிவாயு உருளை வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், உணவகத்தில் எரிவாயு உருளை வெடிக்கவில்லை. அவ்வாறு வெடித்திருந்தால் தனது தாயின் உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால், அவரது உடலில் எந்தவித தீக்காயமும் ஏற்படவில்லை.

மேலும், உணவகத்தில் உணவு தயாரிப்பது கிடையாது.

வெளியிடத்தில் உணவு தயாரித்து கொண்டு வந்து இங்கு விற்பனை செய்கிறோம்.

எனவே, அதிகாரிகள் வெடிவிபத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிந்து தெரிவிக்க வேண்டும் என்றனர்.



கிருஷ்ணகிரி வெடிவிபத்து குறித்து பழைய பேட்டையில் விசாரணை மேற்கொள்ளும் சிறப்பு நிர்வாக நீதிபதி பவணந்தி.

## தமிழக அரசிடம் விளக்கம் கோரப்படும்: மத்திய அமைச்சர்

நமது சிறப்பு நிருபர்



**புது தில்லி, ஜூலை 31:** கிருஷ்ணகிரியில் ஏற்பட்ட வெடி விபத்து சம்பவம் தொடர்பாக தமிழக அரசிடம் விளக்கம் கோரப்படும் என மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறை, வீட்டுவசதித் துறை அமைச்சர் ஹர்தீப்சிங் புரி மாநிலங்களவையில் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் மு. தம்பிதுரை கேள்வி எழுப்பினார். கிருஷ்ணகிரியில் பட்டாசு கிடங்கில் வெடி விபத்து ஏற்பட்டு 9 பேர் உயிரிழந்துள்ளனர். 15 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த சம்பவத்திற்கு எரிவாயு உருளை வெடித்தது காரணமா?, அங்கிருந்த வெடிபொருள்கள் வெடித்ததற்குக் காரணம் என்ன? இது குறித்து தமிழக அரசிடம் மத்திய அரசு விவரம் கேட்குமா போன்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து மத்திய அமைச்சர் ஹர்தீப்சிங் புரி கூறியதாவது: சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் இடத்தில் எல்பிஜி எரிவாயு உருளை விநியோகம் செய்யும் அனைத்து நிறுவனங்களிடமும் தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஐஓசிஎல், பிபிசிஎல், ஹெச்பிசிஎல் ஆகிய எண்ணெய் நிறுவனங்கள் தாங்கள் எந்த எரிவாயு உருளையையும் விநியோகம் செய்யவில்லை என திட்டவட்டமாக மறுத்துள்ளன.

வணிகம் அல்லது குடியிருப்புப் பகுதியில் பட்டாசு ஆலைக்கு அனுமதி கொடுத்திருக்கக் கூடாது. தமிழக அரசிடம் இதை எடுத்துச் சென்று இந்த சம்பவத்துக்கான காரணம் குறித்து தகவல் அளிக்கும்படி மத்திய அரசு கேட்டுக் கொள்ளும் என்று அமைச்சர் ஹர்தீப்சிங் புரி தெரிவித்தார்.

## லாரி மீது கார் மோதல்: 4 பேர் பலி

**திருப்பரங்குன்றம், ஜூலை 31:** மதுரை மாவட்டம், திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடி அருகே திங்கள்கிழமை அதிகாலை கட்டுப்பாட்டை இழந்த கார், எதிர் திசையில் வந்த சரக்குப் பெட்டக லாரி மீது மோதியதில் 4 பேர் உயிரிழந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், செங்கண்குழிவிளை குமரன்குடி பகுதியைச் சேர்ந்தவர் செல்வம். இவரது மகன் ஜேம்ஸ் மார்ட்டின் (34). தனியார் கப்பலில் பணிபுரிந்து வந்தார். செல்வம் கடந்த சில நாள்களுக்கு முன்பு உயிரிழந்த நிலையில், இறுதிச் சடங்கில் பங்கேற்க ஜேம்ஸ் மார்ட்டின் ஊருக்கு வந்தார். விடுமுறை முடிந்து சென்னைக்கு சகோதரர் சாம் டேவிட்சன் (30), உறவினர் கமலேஷ் (50) ஆகியோருடன் ஞாயிற்றுக்கிழமை இரவு காரில் புறப்பட்டார்.

திங்கள்கிழமை அதிகாலை 2 மணியளவில் மதுரை – விருதுநகர் நான்குவழிச் சாலையில் நல்லமநாயக்கன்பட்டி விலக்கு அருகே கார் கட்டுப்பாட்டை இழந்து, எதிர்திசையில் பெங்களூரிலிருந்து விருதுநகருக்கு மின்னணு சாதனங்களை ஏற்றிக் கொண்டு வந்த மினி சரக்குப் பெட்டக லாரி மீது மோதியது.

இதில், ஜேம்ஸ் மார்ட்டின், சாம் டேவிட்சன், கமலேஷ், லாரி ஓட்டுநரான மதுரை செல்வகுமார் (32) ஆகிய 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.


### சிட்டி சிவில் XXIV உதவி நீதிபதி சென்னை நீதிமன்றத்தில்
**O.S NO.6834 OF 2021**

ICICI வங்கி லிமிடெட்.
அதன் பிரதிநிதியாக மேலாளர் ...வாதி
Vs.
பெறுநர்
M.லட்சுமி W/o. முருகேசன்,
கதவு எண்.165, ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர், திருவேற்காடு,
1வது தெரு, அயப்பாக்கம்,
LM:பிரேமதாஸ் மஹால் பின்புறம்,
சென்னை-600077 ...பிரதிவாதி

**அறிவிப்பு**

இந்த மாண்புமிகு சிட்டி சிவில் XXIV உதவி நீதிபதி நீதிமன்றம், சென்னை முன்னிலையில் மேற்படி **O.S NO.6834 OF 2021** சிவில் வழக்கு, பணத்தை வசூலிப்பதற்காக உங்களுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ளார். நீங்கள் ஆஜராவதற்காக மேலே உள்ள வழக்கு 22.08.2023 அன்று விசாரணைக்கு வருகிறது. மேலும் அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நீங்கள் ஆஜராகி உங்கள் ஆட்சேபணையை நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் நீங்கள் ஆஜராகத் தவறினால் மேற்கண்ட விவகாரம் நீங்கள் இல்லாத நிலையிலும் முடிவு செய்யப்படும்.

//நீதிமன்ற உத்தரவின்படி//
H.சேகரன்
வழக்கறிஞர்



### பொது அறிவிப்பு

ICICI Bank | கிளை அலுவலகம்:ICICI பேங்க் லிமிடெட் . அலுவலக எண் 201-B, 2வது தளம், சாலை எண். 1, மனை எண் - B3, WIFI IT பார்க், வேகில் தெழிற்பேட்டை, தானே (மேற்கு)-400604

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தாரர்கள், கடன் வசதி பெற்று அந்தக் கடன் அசலையும், வட்டியையும் முறையாகச் செலுத்தத் தவறிவிட்டனர். அதனால் அந்த கடன்கள் வாராக் கடன்கள் (NPA) என்ற பிரிவில் சேர்க்கப்பட்டு விட்டன. அதையடுத்து, 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 13 (2) கீழ், கடன்தாரர்களின் கடைசியாக தெரிந்த முகவரிக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன எனினும் அது பட்டுவாடா ஆகவில்லை. அத்துடன் கீழ்காணும் கடன்தாரர்களுக்கு தகவல் அளிக்கும் பொருட்டு அதன் விவரம் இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

| வ. எண் | கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் (கடன் கணக்கு எண்) மற்றும் முகவரி | அடமான சொத்து / நடவடிக்கைக்குட்பட்ட சொத்து/ முகவரி | அறிவிப்பு அனுப்பிய தேதி / அறிவிப்பு தேதியின் படியிலான நிலுவைத்தொகை | NPA தேதி |
|---|---|---|---|---|
| 1. | பிரவீன் சிங் கவுர் & மனிஷா கவுர் (LBKHD00004940679)-மக்கான்எண்.53, ராமா காலனி, லோக்மணி திலக், வார்டு, எண். 30, கந்த்வா-450001. | மனை எண். 01 வடக்குப் பகுதி, தெரு எண்.01 (17) சம்யக் பிளாட்டினம் காலனி கிராம் ரெஹ்மான்புரா செகான் மக்கான் கிழக்கு நிமார் P H.எண்.-40 கந்த்வா-450001 | ஜூன் 20, 2023 ரூ. 20,80,025.00/- | 06-04-2023 |

மாற்றுமுறை சேவையில் அறிவிப்பினை அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கடன் பாக்கி முழுவதையும் வங்கியிடம் செலுத்த வேண்டும் என கடன்தாரர்கள் மற்றும் அல்லது ஜாமீன்தாரர்கள் (பொருந்துகின்றபடி) அறிவுறுத்தப் படுகின்றனர். தவறும் பட்சத்தில், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்ட ஷரத்துகள்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேதி : ஆகஸ்ட் 01, 2023
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிமிடெட்



### BAJAJ FINSERV — பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

**பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டடம், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா - 411014.**
**கிளை அலுவலகம்: அலகு எண் - 804, 805, 806, 5வது தளம், டெல்டா பிரிவு, ரஹேஜா டவர்ஸ், 177, அண்ணா சாலை, சென்னை-600002.**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான கோரிக்கை (DEMAND) அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ளவர் M/s.பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் தங்கள் கடன் பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்கு- அதாவது பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட சொத்தின் மீதான வீட்டுக் கடன்களின் / கடன்களின் அசல் தொகையை அதன் வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் திருப்பிச் செலுத்தத் தவறியவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பை வெளியிடுவதோடு குறிப்பிட்ட கடன்கள் செயல்படாச் சொத்தாகவும் (NPA) அறிவிக்கப்படுகின்றன. மேலும் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2) மற்றும் அதன் கீழான விதிகளின்படி அறிவிப்புகள் ஏற்கெனவே அன்னாரின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளுக்கு அனுப்பப்பட்டு அவை சார்பு செய்யப்படாமல் / சேர்ப்பிக்கப்படாமல் திரும்பி வந்து விட்டன. ஆகையால் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) தங்களுக்கு அவ்வப்பொழுது வழங்கப்பட்ட கடன் வசதிகளின் பேரிலான நிலுவைத் தொகைகளைச் செலுத்தித் தீர்க்குமாறு இந்த வெளியீட்டின் மூலம் தெரிவிக்கப்படுகிறது / அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரிகள் | கடனீட்டுச் சொத்து / அடகு வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சொத்தின் முகவரி | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை |
|---|---|---|
| கிளை : சென்னை LAN எண்.H403HHL0172748 & H403HLT0180173 1.J சுரேஷ் (கடன்தாரர்) 317 B-3 Gf Jgs விநாயக் ஃபிளாட்ஸ், விஜயா நகர் 6வது பிரதான சாலை, ராம் நகர் வடக்கு விரிவு, வேளச்சேரி, சென்னை-600042 | சொத்து விவரம்: விவசாயம் சாராத சொத்து மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், விவரம் பின்வருமாறு: ஃபிளாட் மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும்,1வது தளம் (மேற்குப் பகுதி) பரப்பளவு 665 சதுர அடி (பொதுவான பகுதி உட்பட) மற்றும் மொத்தமுள்ள மனையின் பரப்பளவு 1410 சதுர அடி படி பரப்பளவு 1398 சதுர அடியில் நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு 413.07 சதுர அடி, ச எண்.180/2 பகுதி பட்டா படி, புதிய ச எண்.180/2a பகுதி, பெருங்களத்தூர் கிராமம், மனை எண்-B1, காமாட்சி நகர், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை-600063 கிழக்கு: ராமதாஸ் நாயக்கர் நிலம் மேற்கு: 24 அடி சாலை வடக்கு: ச.எண்.180/2a பகுதி தெற்கு: மனை எண்-B 2 | ஜூலை 18, 2023 ரூ.21,00,488/- (ரூபாய் இருபதோரு லட்சத்து நானூற்று எண்பத்து எட்டு மட்டும்) |

அறிவிப்பைச் சேர்ப்பிப்பதற்கான மாற்றுச் சேவையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் மற்றும் / அல்லது கூட்டுக் கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள் இவ்வறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத்தொகையை எதிர்கால வட்டியுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறினால் (பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு இருக்கக்கூடிய வேறெந்த உரிமைக்கோ தீர்வுக்கோ பாதகமேற்படாத வகையில்) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4)-இன் கீழ் கடனீட்டுச் சொத்துக்களை / அடமானச் சொத்துக்களை சுவாதீனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேற்குறிப்பிட்டோர் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் சார்பு செய்யப்பட்டுள்ள மேற்படி சொத்துக்களைக் கைதுறக்கவோ அவற்றின் மீது மூன்றாம் தரப்புப் பாத்தியதையை ஏற்படுத்தவோ கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேதி : 01-08-2023 இடம் : சென்னை
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்



### Chola — Enter a better life — சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: முதல் தளம், டேர் ஹவுஸ், எண்.2, என்.எஸ்.சி. போஸ் ரோடு, சென்னை-600 001.
கிளை அலுவலகம்: ASV அதர்ஷ் டவர், 719, பதாரி சாலை, அண்ணா சாலை அருகில், சென்னை, தமிழ்நாடு-600 002

**சுவாதீன அறிவிப்பு (விதி 8 (1) -ன் கீழ்)**

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-ன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-ன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினை பத்தி (B)-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பி பத்தி (C)யில் குறிப்பிடப்பட்டுள்ள நாள்படியான பத்தி (D)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகையை வட்டியுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் அத்தொகையினை செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-ன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி பத்தி (F)-ல் குறிப்பிட்டுள்ள நாள் படி பத்தி (E)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், பத்தி (E)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**-க்கும் பத்தி (D)-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் சேர்த்து செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனீட்டுச் சட்டத்தின் பிரிவு 13 (8)-ன் படி மொத்த நிலுவைத் தொகையையும் எல்லாச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் விற்பனை அறிவிப்புக்கு முன் செலுத்திக் கடனீட்டுச் சொத்தைக் கடன்தாரர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

| வ. எண். | கடன்தாரர் பெயரும் முகவரியும் மற்றும் கடன் கணக்கு எண். | கேட்பு அறிவிப்பு நாள் | நிலுவைத் தொகை ரூ. | அசையா சொத்தின் விவரங்கள் | சுவாதீன தேதி |
|---|---|---|---|---|---|
| (a) | (b) | (c) | (d) | (e) | (f) |
| 1. | கடன் கணக்கு எண்: HE01TRM00000008587 1. தயானன்.V (விண்ணப்பதாரர்), 2. தயானன் மகாலட்சுமி (இணை-விண்ணப்பதாரர்), 3. வேதாசலம் பில்டிங் காண்டிராக்டர் (இணை-விண்ணப்பதாரர்), 4. வேதாசலம் சரோஜா (இணை-விண்ணப்பதாரர்), அனைவரின் முகவரி: எண்.10/20, இந்திரா காந்தி தெரு, காவேரி நகர், சைதாப்பேட்டை, சென்னை - 600 015. | 11.05.2023 | 09.05.2023 அன்று உள்ள படி ரூ.29,24,772/- மற்றும் அதற்கு உண்டான வட்டி | தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சென்னை மாவட்டம் மாம்பலம் தாலுகா, மாம்பலம் கிராமம், கதவு எண்.20, இந்திரா காந்தி தெரு என்ற முகவரியில் டவுன் சர்வே எண்.116/2 பகுதி, பிளாக் எண்.30, அப்பாவு நகர் திட்டத்தில் மனை எண்.162-ல் உள்ள 90 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் அதனுடன் M.E.S, குழாய் நீர், வடிகால் இணைப்பு மற்றும் பல. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், மற்றும் எல்லைகள்: வடக்கில்: 2வது சந்து, தெற்கில்: மனை எண்.171, கிழக்கில்: மனை எண்.161, மேற்கில்: மனை எண்.163. அளவுகள்: வடக்கு பகுதியில்: 6.7 மீட்டர், தெற்கு பகுதியில்: 6.5 மீட்டர், கிழக்கு பகுதியில்: 13.7 மீட்டர், மேற்கு பகுதியில்: 13.7 மீட்டர். | 29.07.2023 |

தேதி : 01.08.2023
இடம் : சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்



### தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பு
டிவிஷன் பெஞ்ச் – II, சென்னை
CP (CAA)/27 (CHE)/2023 IN IBA/1017/2019
நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 230 & 66 விஷயத்தில் மற்றும் நொடித்தல் மற்றும் திவால் நிலை தொகுப்பு 2016–ன் விதிகள் விஷயத்தில் மற்றும்
M/S. ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் (கலைப்பில் உள்ளது) விஷயத்தில் [CIN NO: U15421TN1988PLC015660] மற்றும்
SNJ டிஸ்டில்லர்ஸ் பிரைவேட் லிமிடெட்டால் சமர்பிக்கப்பட்ட சமரசம்/சீரமைப்பு திட்டம் தொடர்பான விஷயத்தில்

திரு. அனுராக் கோயல்
M/S ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட்டின் கலைப்பாளர்
எண். 112, எல்டோராடோ பில்டிங்,4வது தளம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600034,
மின்னஞ்சல்: cirp.ambikasugars@caanurag.com
...மனுதாரர்/கலைப்பாளர்

**நிறுவன மனு அறிவிப்பு**

SNJ டிஸ்டில்லர்ஸ் பிரைவேட் லிமிடெட்டால் தாக்கல் செய்யப்பட்ட சமரசம்/சீரமைப்பு திட்டத்தை அனுமதிப்பதற்கான நிறுவனத்தின் மனு நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 230 & 66 மற்றும் திவால் மற்றும் திவால்நிலை தொகுப்பு 2016–ன் விதிகளின் கீழ் மனுதாரர்/கலைப்பாளரால் ஜூன் 12, 2023 அன்று மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (NCLT), டிவிஷன் பெஞ்ச் – II, சென்னை முன்பு சமர்ப்பிக்கப்பட்டது. தீர்ப்பு வழங்கும் ஆணையம் 12.07.2023 (24.07.2023 அன்று பெறப்பட்டது) தேதியிட்ட தனது உத்தரவில், மேற்கண்ட நிறுவனத்தின் மனுவில் நிறைவேற்றப்பட்டுள்ளபடி, 06.09.2023 அன்று மேற்கண்ட நிறுவனத்தின் மனு மீதான விசாரணை மற்றும் இறுதி முடிவுக்கான தேதியாக நிர்ணயித்துள்ளது மற்றும் விசாரணைத் தேதியை அறிவிப்பாக பத்திரிக்கையில் விளம்பரமாக வெளியிடுமாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மனுவை எதிர்க்க விரும்பும் நபர்கள், மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், டிவிஷன் பெஞ்ச் – II, சென்னை, கார்ப்பரேட் பவன், (புதிய பில்டிங்), 3வது தளம், எண்.29, ராஜாஜி சாலை, சென்னை, தமிழ்நாடு – 600 001–ல் தங்கள் ஆட்சேபனைகளை (ஏதேனும் இருந்தால்) நிறுவனத்தின் மனு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மனுவை எதிர்க்க விரும்பும் எந்தவொரு நபரும், நிறுவனத்தின் மனு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக, தங்களது ஆட்சேபனைகள் அல்லது விண்ணப்பத்தை மனுதாரர்/கலைப்பாளருக்கு அளிக்க வேண்டும். நிறுவன மனுவின் நகல் அது தேவைப்படும்பட்சத்தில், கீழே கையொப்பமிட்டவரால் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தும்போது வழங்கப்படும்.

ஒப்பம்/–
திரு. அனுராக் கோயல்
M/S ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட்டின் கலைப்பாளர்
எண். 112, எல்டோராடோ பில்டிங், 4வது தளம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600034
தேதி: 01.08.2023
இடம் : சென்னை
மின்னஞ்சல்: cirp.ambikasugars@caanurag.com



### கடன் மீட்பு தீர்ப்பாயம் எண்-II சென்னை
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

**கோரிக்கை அறிவிப்பு பிரிவு 25 - 28-ன் கீழ்**

(வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கி வசூலிப்பு சட்டம் 1993-ன் பிரிவுகள் 25-28-ன் கீழ் மற்றும் வருமான வரிச் சட்டம் 1961 இரண்டாவது அட்டவணையின் 2வது விதியின் கீழ் அறிவிப்பு)

TRC 1056/2022 — 21.07.2023

பேங்க் ஆஃப் மஹாராஷ்ட்ரா
-எதிரிடை-
V. சுந்தர் ராஜன் மற்றும் மற்றொருவர்

**பெறுநர், (1) V. சுந்தர்ராஜன்,** எண்.4, லட்சமி நகர், ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம், சென்னை - 600 087. **(2) S. கல்பனா,** எண்.4, லட்சமி நகர், ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம், சென்னை - 600 087.

1. தலைமை அலுவலர், கடன் மீட்பு தீர்ப்பாயம்-I, சென்னை அவர்களின் உத்தரவின் பெயரில் வழங்கப்பட்ட மீட்பு சான்றிதழின்படி, **OA/92/2015-ல்** உங்களிடமிருந்து (கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ), மீட்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.45,63,508.32 (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எட்டு மற்றும் பைசா முப்பத்து இரண்டு மட்டும்)** அத்துடன் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்களும் சேரும் என்பதை அறியவும் மற்றும் நிதி அமைச்சகம், நிதி சேவைகள் துறை அறிவிக்கை எண். S.O. 4717 (E) தேதி 04.10.2022-ன் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இந்த மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம்-II சென்னைக்கு மேற்சொன்ன DRC 163/2016 மாற்றப்பட்டுள்ளது. **மேலும் மேற்சொன்ன மீட்பு சான்றிதழ், TRC எண்.1056/2022 என மறுஎண்ணிடப்பட்டுள்ளது.**
2. நீங்கள் மேற்சொன்ன தொகையை இந்த அறிவிப்பு கிடைத்த தேதியில் இருந்து **15 தினங்களுக்குள்** செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும்பட்சத்தில், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கி வசூலிப்பு சட்டம் 1993-ன் விதிகளின்படி மீட்பு நடவடிக்கை எடுக்கப்படும்.
3. அடுத்த விசாரணை தேதி அல்லது அதற்கு முன்னர் உங்கள் சொத்துக்களின் விவரங்களை ஒரு பிரமாண பத்திரத்தில் அறிவிக்கும்படி உத்தரவிடப்படுகிறீர்கள்.
4. மேலும் நடவடிக்கைகளுக்கு, தாங்கள் கீழே கையொப்பமிட்டவர் முன்பாக **26.09.2023 முற்பகல் 11.30 மணிக்கு** ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.
5. மேற்சொன்ன தொகையுடன் நீங்கள் செலுத்த வேண்டியன :
   (அ) சான்றிதழ்/நிறைவேற்றும் நடவடிக்கைகளுக்காக இந்த அறிவிப்பு தேதியிலிருந்து கடன் முழுமையாக வசூலிக்கப்படும் தேதி வரையான காலத்திற்கு வட்டி செலுத்த வேண்டியுள்ளது.
   (ஆ) கடன் பாக்கி வசூலிக்கப்படும் வரை இந்த அறிவிப்புக்கான செலவு உட்பட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் உத்தரவாதங்கள் மற்றும் இதர நடவடிக்கைகள் சேர்த்து நீங்கள் செலுத்த வேண்டியுள்ளது.
6. **31.05.2016 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு சான்றிதழ் கடன்தாரர்களுக்கு பட்டுவாடா ஆகாததால் இந்தப் பத்திரிகையில் இப்போது இந்த கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுகிறது.**

21 ஜூலை, 2023 அன்று எனது கையொப்பத்துடன் தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

(S. சோஃபின் ரோஸ்)
மீட்பு அதிகாரி.


ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்


### மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் எண்.III, சென்னை, முன்னிலையில்
T.A.எண்.454/2023

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, [IFSC Code - SBIN0017193], தனிநபர் கடன் மத்திய செயல்பாட்டு மையம், MRC நகர், எண்.4, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை-600004. அதன் பிரதிநிதியாக முதன்மை மேலாளர் ...விண்ணப்பதாரர்
-எதிர் -
திரு. M.சுரேஷ் குமார், (PAN NO. EIBPS3370G) த/பெ. திரு.மோகன், எண்.40/16, VV கோவில் தெரு, காமராஜர் அரங்கம் எதிரில், தேனாம்பேட்டை, சென்னை-600086 ...பிரதிவாதி

**பிரதிவாதிகளுக்கான மாற்றுச்சேவை மூலம் அழைப்பாணை**

மேற்கூறிய பெயருடைய மனுதாரர் பிரதிவாதிகளிடம் இருந்து **12.5.2022 அன்றுள்ளபடி ரூ.74,86,975.00** (ரூபாய் எழுபத்து நான்கு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மட்டும்) தொகையை வசூலிக்க வேண்டி இந்த தீர்ப்பாயத்தில் மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பதாரர் **T.A.454/2023** தாக்கல் செய்துள்ளார். அதேசமயம் சாதாரண முறையில் அளிக்கப்பட்ட அழைப்பாணை பலன் அளிக்காத காரணத்தால், மாண்புமிகு தீர்ப்பாயத்தின் ஆணையின்படி மாற்றுச் சேவையான செய்திதாள் மூலம் இவ்வறிப்பு வெளியிடப்படுகிறது.

அதனால் சென்னை, மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் முன்பாக நீங்கள் நேரடியாகவோ அல்லது உங்களால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ **22.8.2023** அன்று காலை **11.00** மணிக்கு ஆஜராகி, கோரப்பட்டுள்ள நிவாரணங்களை ஏன் வழங்கக் கூடாது என்பதற்கான காரணத்தை எழுத்து பூர்வமாக சமர்ப்பிக்குமாறு தீர்ப்பாயத்தினால் உத்தரவிடப்படுகிறீர்கள்.

அவ்வாறு நீங்கள் ஆஜராகத் தவறினால், மேற்படி அசல் விண்ணப்பமானது நீங்கள் இல்லாமலேயே சட்டப்படி விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் எனது கைப்பட 27.07.2023 அன்று வழங்கப்பட்டது.**

ஒப்பம்/-
தீர்ப்பாயம் முத்திரை — பதிவாளர் கையொப்பம்



### बैंक ऑफ़ इंडिया — பேங்க் ஆஃப் இந்தியா — Relationship beyond banking
**சௌக்கார்பேட்டை கிளை**
கதவு எண்.59/3, தேவராஜ முதலியார் தெரு, சௌக்கார்பேட்டை, பார்க் டவுன், சென்னை-600003
தொலைபேசி எண்: 044-25354008, 25352381 / 2986

**சுவாதீன அறிவிப்பு (விதி 8(1)) அசையா சொத்திற்கானது**

கீழே கையொப்பமிட்டுள்ள **பேங்க் ஆஃப் இந்தியா-ன்** அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் பிரிவு 13(12) அதன் விதி 3 ன்படியும் அதனுடன் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதியின் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **M/s. Sundar Steel Traders, திரு. K.S.சுந்தர் (கடன்தாரர்) மற்றும் திருமதி. கலாவதி.S (ஜாமீன்தாரர்)** அவர்களுக்கு **16.05.2023** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையான **ரூ.1,93,12,471.00 (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்று எழுபத்து ஒன்று) (அறிவிப்புத் தேதி வரையிலான ஒப்பந்த அடிப்படையிலான நிலுவைத் தொகை) அதனுடன் ஆண்டிற்கு @ 11.35%** (மாதாந்திர வட்டி மற்றும் அனைத்து செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட செலவுகள்) ஆகியவற்றை சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** திரும்ப செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் பாக்கித் தொகையை செலுத்தத் தவறி விட்டபடியால் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது, மேற்படி 2002 ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **31.07.2023** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமான சொத்து விஷயத்தில் எந்தவொரு பேரமோ, நடவடிக்கைகளோ வைத்துக் கொள்ளக்கூடாது, மீறி வைத்துக் கொண்டால் அது **பேங்க் ஆஃப் இந்தியாவுக்கு** திரும்ப செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையான **ரூ.1,93,12,471.00 (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்று எழுபத்து ஒன்று) (அறிவிப்புத் தேதி வரையிலான ஒப்பந்த அடிப்படையிலான நிலுவைத் தொகை) அதனுடன் ஆண்டிற்கு @ 11.35%** (மாதாந்திர வட்டி மற்றும் அனைத்து செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட செலவுகள்) சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) நிபந்தனைகளின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையாச் சொத்தின் விவரங்கள்**

திரு. K.S.சுந்தர் அவர்களுக்கு சொந்தமான மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பெரியமேடு சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பழைய சர்வே எண்.908 பகுதி, தற்போது R.சர்வே எண்.532/1 இல் அடங்கிய சென்னை 600 008, எழும்பூர், கெங்குரெட்டி சாலை, கதவு எண்.75 (முன்னர் எண்.33) இல் அமைந்துள்ள 3191 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: R.சர்வே எண்.533; தெற்கில்: R.சர்வே எண்.531; கிழக்கில்: R.சர்வே எண்.532/2 மற்றும் 530; மேற்கில்: R.சர்வே எண்.523 (கெங்கு ரெட்டி சாலை).

தேதி: 31.07.2023;
இடம்: சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி,
பேங்க் ஆஃப் இந்தியா



### ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அஞ்சலில் ஏற்பு அட்டையுடன் / விரைவு அஞ்சல் / இமெயில்
பதிவு அலுவலகம் : இந்தியன் காம்பௌண்ட், வேராவால், குஜராத்-362266
கிளை அலுவலகம்: அறை எண் 401, 4வது தளம், கேமாக் சதுக்கம், 24, கேமாக் தெரு, கொல்கத்தா-700016
யூனிட் எண் 10 & 12, 4வது தளம் மற்றும் 6வது தளம், ஓவல், வெங்கட் நாராயண் சாலை, தி. நகர், சென்னை, தமிழ்நாடு-600017

**பிற்சேர்க்கை IV**
(பார்க்க - விதி 8(6) க்கான விதி விலக்கு)
**அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் ' 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 ன் (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) விதி 8 (6) மற்றும் விதி 9(1) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அவரவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், TIL லிமிடெட் (கடன்தாரர்) (அதன் இயக்குனர்கள் மூலம்) யிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 08.06.2022ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 6,39,44,852.46/- (ரூபாய். ஆறு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எட்னூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் பைசா நாற்பத்து ஆறு மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தத்தக்க வீதத்தில் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக ''இருக்கின்ற இடத்தில்'' மற்றும் ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற அடிப்படையில் 22 ஆகஸ்ட் 2023 அன்று விற்பனை செய்யப்படும்.

அடிப்படை விலை ரூ. 5,33,33,438/- (ரூபாய். ஐந்து கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து முப்பத்துமூன்றாயிரத்து நானூற்று முப்பத்து எட்டு மட்டும்) டேவணித்தொகை ரூ. 53,33,343.80/- (ரூபாய். ஐம்பத்து மூன்று இலட்சத்து முப்பத்துமூன்றாயிரத்து முன்னூற்று நாற்பத்து மூன்று மற்றும் பைசா எண்பது மட்டும்) ஆகும்.

**அசையா சொத்து விபரம்**

மத்திய சென்னை பதிவு மாவட்டம், தென் சென்னை சார் பதிவு மாவட்டம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம் கிராமம், (மாநகராட்சி எல்லைக்குட்பட்ட) R.S.எண். 156/2 ல் உள்ள 9 கிரவுண்டு 1600 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 22, கதவு எண். 1A ல் அமையப்பெற்ற ''ஜாவீர் ப்ளாஸா'' என அழைக்கப்படும் பல அடுக்கு கட்டிடத்தின் ஏழாவது தளத்தில் உள்ள 6125 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட எண். 1-5 என்ற அலுவலக இடம் (இது கள பரப்பு, சுவர் மற்றும் சேவை பரப்புகளில் உள்ள விகிதாச்சார பங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியது) மற்றும் 1951 சதுர அடி பிரிபடாத பங்கு மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இவ்விடத்தின் எல்லைகளாவன:
திரு அருணாச்சலத்துக்கு சொந்தமான சைட்டுக்கு - வடக்கு,
கோடம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு - தெற்கு,
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு - கிழக்கு,
S படேல் & பிறருக்கு சொந்தமான ப்ளாட்டுக்கு - மேற்கு.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் வலைதள தொடர்பு i.e. **https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx** மற்றும் **https://sarfaesi.auctiontiger.net** யை பார்வையிடவும்.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்
9677317779 / 7596946467

தேதி : 01.08.2023
இடம் : சென்னை & கொல்கத்தா